செ.வெ. எண்: 032 நாள்: 13.01.2017

## கனரக தொழில் துறையின் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான நிதி உதவி குறித்த கருத்தரங்கு

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க புதிய கண்டுபிடிப்புகளுக்கான பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகின்றது. அந்தவகையில் குளோபல் டெக்னாலஜி அலையன்ஸ் (GITA) எனும் மத்திய அரசு சார்ந்த நிதி உதவி வழங்கும் அமைப்புடன் இணைந்து தொழில்நுட்பம் கையகப்படுத்தலுக்கான நிதி திட்டம் (Technology Acquisition Fund Programme) தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு நடத்த உள்ளது. இந்த கருத்தரங்கில் மூலதன சாதனங்கள் வாங்குதல், நவீன தொழில் நுட்பங்கள் பற்றி அறிந்து அதனை கொள்முதல் செய்துகொள்வது பற்றியும், அதை பயன்படுத்திக் கொள்ளவும், நிதி உதவிகள் பெறும் வழிகளைப்பற்றி விளக்கங்கள் தரப்படும். மேலும், ஒப்பந்தங்கள் மூலமாகவும், நிறுவனமே சொந்தமாக மற்றும் இந்த இரண்டு வழிகள் மூலமாகவும் தொழில்நுட்பங்களை பெற்றுக்கொள்வது பற்றியும் இக்கருத்தரங்கில் விளக்கப்படும்.

இந்த கருத்தரங்கில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தி தங்கள் உற்பத்தியை பெருக்கத் திட்டமிட்டுள்ள மூலதனசாதன உற்பத்தி துறையைச் சார்ந்த அலகுகள் மற்றும் கூட்டமைப்புகள், குழுமங்கள் கலந்துகொள்ளலாம். இந்த தொழில்நுட்பம் கையகப்படுத்துதல் திட்டத்தில் இயந்திர சாதனங்கள், பிளாஸ்டிக் தயாரிப்பு சாதனங்கள், மின்உற்பத்தி மற்றும் மின் உற்பத்தி நிலைய சாதனங்கள், சுரங்கம் சார்ந்த இயந்திரங்கள், உலோகப்பொருள் தயாரிப்பு சாதனங்கள், துணிவகை சார்ந்த சாதனங்கள் மற்றும் ஆய்வு மற்றும் ஆலை இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரப்படும். மேற்கண்ட கருத்தரங்கிற்கு மேலே கூறபட்ட 6 துறைகளை சார்ந்த சிறு, குறு, நடுத்தர உற்பத்தி தொழில் சாலைகள் நடத்தபடுவோர் கலந்து கொள்ளலாம்.

இக்கட்டணமில்லா பயிற்சி சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பழைய கட்டிடத்தில் (கிண்டி இரயில் நிலையம் எதிரில்) 20.01.2017 அன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் சேர உங்களுடைய நிறுவனம் மற்றும் தொடர்பு குறித்த

விவரங்களை கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரியில் பதிவுசெய்து உங்களுடைய பங்கேற்பினை உறுதிசெய்துகொள்ள வேண்டுகிறோம்.

மின்னஞ்சல் முகவரி : ddp@editn.in / tc3@editn.in

மேலும் தகவல்களுக்கு: துணை இயக்குனர் (8754590961) / பயிற்சி ஒருங்கிணைப்பாளர் (8754514770)

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**